REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை : ஐப்பசி 5உ வியாழன் (21—10—54) ★ ★ வெளியூர் : ஐப்பசி 6உ வெள்ளி (22—10—54) [இதழ் 111


## சொந்த மொழி காக்கும் ஆரிய செம்மல்கள்!

சென்னை, அக். 19—

சென்னை சமஸ்கிருத அகாடமியின் பொதுக்குழுக் கூட்டம், சென்னையிலுள்ள சமஸ்கிருதக் கல்லூரியில் டாக்டர் ஏ. நரசிங்கராவ் தலைமையில் நடைபெற்றபோது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : கே பாலசுப்பிரமணிய அய்யர் ; உப தலைவர்கள் : எஸ். வரதாச்சாரியார், டாக்டர் ஏ. நரசிங்க ராவ், டி. எல். வெங்கடராம அய்யர், டாக்டர் வி. ராகவன், வி. அனந்தாச்சாரியார், கே. பாலசுப்பிரமணிய சாஸ்திரி, பி. ஏ. சுப்பிரமணிய அய்யர் ; டிரஸ்டிகள் : கே. சந்திரசேகரன், கே. எஸ். ராமசுவாமி சாஸ்திரி ; பொதுக்காரியதரிசிகள் : ஏ. ஷண்முக (முதலியார்), வி. எஸ். வெங்கடராகவாச்சாரியார் ; பொருளாளர் : ஆர். ரங்காச்சாரியார்.

மற்றும் 12 பேர் நிர்வாகக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# 'ஜாதி தொலைக்கப்பட வேண்டும்'

## 'சமுதாயம் உருவாவதைத் தடுப்பது ஜாதியே'

## 'குடும்பப் பற்று சமுதாயப் பற்றாக வளர வேண்டும்'

### வரவேற்பு வளைவுகளை காங்கிரசார் பிய்த்தது கண்டு வினோபா விம்மல்!

சகார்கா, அக். 20—

"நம் நாட்டில் உள்ள இன்றைய சமுதாயம், ஒரு முழு உருவம் பெற்றதாக இல்லை ; நாம் இதுவரை குடும்பங்களைத்தான் பெற்றிருக்கிறோம். குடும்ப வாழ்க்கை உணர்வுதான் நம்முன் வேர் விட்டிருக்கிறதேயல்லாது, நாம் சமுதாயம் என எதைக் குறிப்பிடுகிறோமோ, அது இன்னும் உருவாகவில்லை ; இருந்துவரும் ஜாதிகளும், உள்ஜாதிகளும், பொது சமுதாயத்தையோ, கிராம சமுதாயத்தையோ உருவாக்க உதவாது."

—இவ்வாறு வினோபாபாவே தனது தொழுகை கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது :—

"இன்று சமுதாயம் உருவாவதற்கு ஜாதிப் பாகுபாடு பெருந் தடையாக இருந்துவருகிறது. ஜாதி ஒழிக்கப்பட வேண்டும். வேரூன்றி உள்ள குடும்பப் பற்று கிராம சமுதாயப் பற்றாக வளர வேண்டும்."

மோராகிராமத்தில், வினோபா பாவை வரவேற்க பல வளைவுகள் கட்டப்பட்டிருந்தன. அவைகளில் தோழர் ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் பெயர் எழுதப்பட்டிருந்ததைக் காணப்பொறாத காங்கிரஸ்கட்சியினர், அவ்வளைவுகளை எல்லாம் அகற்றி அழித்துவிட்டனர்.

அதைக்கண்டு மனம் வெதும்பி வினோபா கூட்டத்தில் கண்ணீர் விட்டுள்ளார் எனவும் தெரியவருகிறது.

---

பெங்களூரில், சேரி திருத்த வேலைகளை திட்டமிட்டுச் செய்ய பெங்களூர் நகரசபை உதவியுடன் மொத்தம் ரூ. 1,11,85,200 செலவிட மைசூர் சர்க்கார் முன்வந்திருக்கிறது !

★★★★★★★★★★★★★★★★★

## எங்கள் நிலைமை என்ன!

"புதுவைக்கு விடுதலை கிடைத்துவிட்டது ; ஆனால், அதனால், எங்களுக்கு என்ன இலாபம் !"—என்று எண்ணி அங்கு கம்யூனிஸ்டுகள் கலக்கமடைகிறார்களாம் !

புதுவை மக்கள் விடுதலைக்கு காரணம் குபேர் குழுவினர் என்று கூறிக்கொள்வது கண்டு, இனி ஆதிக்கம் குபேர் கூட்டத்திடம் போய்ச்சேரும் என்று அஞ்சி, கம்யூனிஸ்டுகள் தங்கள் எதிர்கால நிலைமைபற்றி ஏக்கமடைவதாகத் தெரிகிறது.

★★★★★★★★★★★★★★★★★

### ஈடனுக்கு 'சர்' பட்டம்

பிரிட்டனின் வெளிநாட்டிலாகா அமைச்சரும், கன்சர் வேடிவ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான அந்தோனி ஈடனுக்கு பிரிட்டிஷ் அரசியார், 'சர்' பட்டம் அளித்திருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★

## புதுவைக்கு புது யோகம்!

★

இப்போது மலாய் முதலிய நாடுகளுக்குக் கடல் மார்க்கமாகச் செல்லும் பிரயாணிகள், நாகப்பட்டினம் துறைமுகத்தில் கப்பலேறுகிறார்கள்.

இனி இவர்கள் புதுவைத் துறைமுகத்திலிருந்து கப்பலேற வசதி ஏற்படுத்தப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

நாகையிலிருந்து கிளம்புவதைவிட புதுவையிலிருந்து கிளம்புவதால் பிரயாணத்தில் வசதி அதிகம் ஏற்படும் என்றும், தொலைவு குறையுமென்றும் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★

## விடுதலை பெற்ற புதுவை!

### 'சி' பிரிவு மாநிலமாக மாற்றப்படுமாம்!

வடவரின் ஆதிக்கப் போக்கு!

புதுச்சேரி, அக். 19—

புதுவை, காரைக்கால், யேனம், மாஹி ஆகிய பிரெஞ்சிந்தியத் திட்டுக்களிலிருந்து பிரெஞ்சுக்காரர்கள் வெளியேறியதும் அப்பகுதிகளெல்லாம் ஒரு 'யூனிட்' ஆக கருதப்பட்டு, இப்போது இந்திய அதிகாரியாக அங்குள்ள கேவல்சிங் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்று சொல்லப்படுகிறது.

அப்பகுதிகளில் வாழும் மக்களின் கருத்தை அறிந்த பின் இந்திய மக்கள் சபை ஒரு முடிவுக்கு வரும் வரை, கேவல் சிங் நிர்வாகமே நடைபெறும் எனத் தெரிகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## பாங்கி ஊழியர்களுக்கு வாசவதா உபதேசம்

"பாங்கி ஊழியர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமானால், அவர்கள், ராஜாதியக்ஷா விசாரணைக் குழுவுடன் ஒத்துழைக்க வேண்டும்," என்று இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் தலைவர் எஸ். ஆர். வாசவதா உபதேசம் செய்திருக்கிறார்.

"ராஜாதியக்ஷா குழுவின் முடிவுகளே இறுதியானவை ; அவற்றிற்கு எல்லாதரப்பினரும் கட்டுப்பட்டே ஆகவேண்டும் என்றிருக்கிறது," எனவும் கூறினார்.

"இ. தே. தொ. ச. காங்கிரஸ், பாங்கி ஊழியர் பிரச்னையில் அப்பீல் கோர்ட்டின் முடிவுகளை மத்திய அரசாங்கம் மாற்றியிருக்கக் கூடாதென்றே கருதுகிறது : மேலும், இந்தப் பிரச்னை முழுவதையும் விரிவாக ஆராய ஒரு குழுவை நியமிக்குமாறு கோரவும் எண்ணியுள்ளது என்றும், பாங்கிகளில் உள்ள பெரும் அதிகாரிகளுக்குத் தரப்படும் கொழுத்த சம்பளம் குறைக்கப்படவேண்டும்,"

## தோழர்களுக்கு!

இலங்கை சென்றுள்ள தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் 12-வது ஆண்டு விழாவில், 15—10—54 அன்று, 'முத்தமிழ்' எனும் பொருள் குறித்து ஆற்றிய சிறப்புரையின் சாரம் நாளை 'நம் நாடு' இதழில் வெளிவரும். (ஆ.-ர்.)

## புதுவையில் பதுங்கிக் கிடக்கும் செல்வம்!

★

புதுச்சேரியில், ஏராளமான அளவு (பல லட்சம் பெறுமானமுள்ள) தங்கமும், அதைவிட அதிக அளவு மதிப்புள்ள வைரமும், வேறு பல சாமான்களும், அரசியல் மாறுதலை யூகித்தறிந்தவர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

இவை வரியில்லாமல், புதுவை வந்து சேர்ந்தவை. இவைகளைத் தான், சுங்க வரி கொடுக்காமல், கள்ளக் கடத்தல்காரர்கள் இப்பகுதிகளில் கொண்டுவந்துவிற்று கொள்ளை இலாபம் அடித்து வந்தனர்.

இப்போது புதுவையில் பதுங்கிக் கிடக்கும் தங்கம் வெளியே வந்தால் தங்க மார்க்கெட் நிலவரத்தையே பாதிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

எனவே, சென்னை சர்க்கார், சுங்க இலாகா மூலம், தங்கம், வைரம் ஆகியவைகளை முறைப்படி வெளியே கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

புதுவையில், எங்கெங்கு தங்கம், வைரம் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக சந்தேகம் ஏற்படுகிறதோ, அங்கெல்லாம் சோதனை நடத்தப்படும் என்று கூறப்படுகிறது.

## கேட்டீர்களா வெட்கக்கேட்டை!

★

லால்குடி தொகுதியில் தோற்கடிக்கப்பட்ட ராஜா சிதம்பரம் எப்படியும் திருச்சி மாவட்ட ஆட்சி மன்றத்தில் நுழைந்தாக வேண்டுமென்று 'பிரம்மப் பிரயத்தனம்' செய்து வருகிறாராம்.

உடையார்பாளையம் வட்டாரத்தில் ஒரு தொகுதியில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ்காரரை, ராஜிநாமா செய்யச் சொல்லி, அங்கு தேர்தலுக்கு நிற்க திட்டமிடுகிறாராம்.

அந்தத் தொகுதியில் தமக்குப் போட்டியே எழாதபடி வேலி கட்டிவிட முடியும் என்று ராஜா கருதுகிறாராம் !

பொது மக்கள் ஒரு தொகுதியில் விரட்டி அடித்த பிறகு, வேறோர் தொகுதியில் நுழைய முயற்சிக்கும் செயல், 'ரோஷக்காரரான' ராஜா சிதம்பரம் அவர்களுக்கு எப்படி பிடிக்கும் !

பொது மக்கள்தான் இதுபற்றி என்ன எண்ணுவார்கள் ?

அந்தத் தொகுதியில் ஒரு அம்பில் தர்மலிங்கம் கிளம்பாமலா இருப்பார் !!

## நிற பேதத்தை எதிர்த்து நீக்ரோ சிப்பாய்கள் ஆர்ப்பாட்டம்!

### வெள்ளையர்-நீக்ரோ சிப்பாய்களிடையே கைகலப்பு

சிப்பாய்கள் தாக்குதலுக்கு மூன்று கோவா மக்கள் பலி!

தங்கள் ஆதிபத்தியத்தில் உள்ள கோவாவில், அம்மக்களின் விடுதலை வேட்கையை ஒடுக்குவதற்காக வெள்ளை-நீக்ரோ சிப்பாய்களைக் குவித்து வைத்திருக்கிறது போர்ச்சுகீசிய சர்க்கார். வெள்ளை சிப்பாய்கள் நிற வேற்றுமை காட்டுவதாக நீக்ரோ சிப்பாய்கள் உணரலாயினர். அதனால் ஏற்பட்ட எரிச்சலின் காரணமாக, கோவாவில் உள்ள நாட்டு மக்களைத் தாக்க முனைந்தனர் நீக்ரோ சிப்பாய்கள் ! அதன் விளைவாக மூன்று கோவா மக்கள் மருத்துவ விடுதியில் உயிர் துறந்தனர் என்று கூறப்படுகிறது.

அதன் பிறகு, நீக்ரோ சிப்பாய்கள் போர்ச்சுகீசிய வெள்ளை சிப்பாய்கள் மீது தாக்குதல் துவங்கினர். வெள்ளை சிப்பாய்களும் திருப்பித் தாக்கத் தொடங்கி, நீக்ரோக்களின் தாக்குதலை ஒடுக்கிவிட்டனர். கலகம் ஒடுக்கப்பட்டுவிட்டபோதிலும், உட்பகை புகைந்துகொண்டுதான் இருக்கிறதாகத் தெரியவருகிறது.

# நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 21—10—1954 வியாழன்


# தமிழ் மொழிக்கு முதலிடம்!

ஆங்கில ஆட்சி இங்கு இருந்த காலத்தில், ஆங்கிலப் அரசாங்க மொழியாக்கப்பட்டு, அதற்கு, எல்லாத் துறைகளிலும் முதலிடம் கொடுக்கப்பட்டு வந்தது. அதேபோன்று இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிப் பொறுப்பில் வடவர் ஆதிக்கம் பெற்றவுடன், தங்களுடைய இந்தியை அரசாங்க மொழியாக ஆக்கிக் கொண்டனர். இந்திக்கு புதிய, அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது ஒன்றே, வடவர்தான் இந்தியாவில் அரசியல் எஜமானர்களாக இருக்கிறார்கள் என்பதை மெய்ப்பிப்பதற்குப் போதுமானதாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் அரசாங்க மொழியாக இருக்கும் பெருமையை இந்திக்கு வழங்கியவர்கள், அதை சட்ட சம்மந்தமுடையதாக்க, அரசியல் சட்டத்திலும் அதற்கு ஏற்பாடு செய்துகொண்டனர். அதே அரசியல் சட்டத்தில், மாநிலங்களின் ஆட்சி மொழிகளாக இருக்கும் உரிமை ஒவ்வொரு மாநில மொழிகளுக்கும், தரப்பட்டு இருக்கிறது. அதன்படி பதினான்கு மொழிகளுக்கு மாநில ஆட்சி மொழிகளாகும் உரிமை உண்டு என அரசியல் சட்டம் கூறுகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் அரசாங்க மொழியாக ஆக்கப்பட்டுள்ள இந்தியை ஏற்றம் பெறச் செய்வதில், இந்தியப் பேரரசு எவ்வளவு கவலையும், முயற்சியும் எடுத்துக் கொள்ளுகிறதோ, அதற்குக் கொஞ்சமும் குறையாத அளவில், அரசியல் சட்டத்தின் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பதினான்கு மாநில ஆட்சி மொழிகளை ஏற்றம் பெறச் செய்வதிலும், கவலையும் முயற்சியும் இந்தியப் பேரரசுக்குக் கண்டிப்பாக இருந்தாக வேண்டும். ஆனால், அரசியல் சட்டத்தை அலட்சியப்படுத்தி விட்டு, ஒப்புக்கொள்ளப்பட்ட மாநில ஆட்சி மொழிகளை வேண்டுமென்றே சீரழிய விடுத்து, அச்சீரழிவின் மீது இந்தி மொழிக்கு வளம் சேர்க்கும் வகையில், இந்தியப் பேரரசின் போக்கு இருந்து வருகிறது.

ஒப்புக்கொள்ளப்பட்ட மண்டல ஆட்சி மொழிகளும் வளர்ந்து, அதே காலத்தில் இந்தி மொழியும் வளரவேண்டும் என்ற உயர்ந்த நோக்கு இந்தியப் பேரரசில் ஆதிக்கம் பெற்றுள்ள வடவர்களுக்கு அணுவளவாவது இருந்திருக்குமானால், அவர்கள், அதை, இதற்குள்ளாக செயலில் காட்டி இருக்க வேண்டும். அவர்கள், அதை, இதுவரை சிறிதளவாவது காட்டி இருக்கிறார்களா என்ற கேள்விக்கு, அறவே இல்லை என்றுதான் ஆணித்தரமாகக் கூறவேண்டியதாக இருக்கிறது.

சொந்த மொழியான இந்தியையும், வட்டார மொழிகளையும் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு கருதாது, எல்லா மொழிகளையும் சரிநிகர் சமமாகக் கருதுவதுதான் தங்கள் உள்ளக்கிடக்கையாக வடவர்கள் கொண்டிருப்பார்களானால், எல்லாத் துறைகளிலும் இந்திக்கு ஏற்றம் தருவது போலவே, ஒப்புக்கொள்ளப்பட்ட மற்ற வட்டார மொழிகளுக்கும் சமமான ஏற்றம் கொடுக்க முன்வந்திருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சென்னை மாநிலத்தில் தமிழ் வழங்கும் பகுதியில் உள்ள புகை வண்டி நிலையம், அஞ்சல் நிலையம் போன்ற பொது இடங்களில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பதினான்கு மாநில ஆட்சி மொழிகளில் ஒன்றான தமிழுக்கு முதலிடமும், இந்திய அரசாங்க மொழிக்கு இரண்டாம் இடமும் எற்கெனவே கொடுத்திருக்க வேண்டும். இவ்வாறு இந்தியப் பேரரசு செய்திருக்குமானால், இந்தக் கால கட்டத்தில், இந்தித் திணிப்பை ஒழித்துக்கட்டவேண்டிய அவசியம் தமிழருக்கு ஏற்பட்டு இருக்கவே இருக்காது.

ஒவ்வொரு மொழியினருக்கும், அவரவர்கள் தாய்மொழியில் அறிவு வளர்ச்சி பெற இடம் இருப்பதுபோல், பிற மொழியில் இருப்பது இயலாது என்பது ஒப்ப முடிந்த உண்மை. தமிழர்கள் வாழும் நிலப்பரப்பில், ஊர்ப் பெயரோ, அஞ்சல் நிலையப் பெயரோ, புகை வண்டி நிலையப் பெயரோ, தமிழில் இருந்தால்தான், அதை அவர்கள் அறிந்துகொள்வது எளிதாகும். பெரும்பான்மையோர் வழங்கும் மொழிக்கு, அப்பகுதியில் சிறப்பளிக்கப்படுவதைத் தான் ஒரு பெருமையாக அப்பகுதி மக்களும் கொள்ளுவர். தங்கள் பகுதியிலேயே தங்கள் மொழியை ஏறு குதிரையாக்கி, வளமில்லாத வேற்று மொழி ஒன்று அதன்மீது சவாரி செய்யும் நிலையில், பிற மொழிக்கு ஏற்றம் கொடுக்கப்பட்டதை, அம்மொழியினர் காண நேர்ந்தால், அவர்கள் கருத்தில் கடும்புயல் வீசாமல் எப்படி இருக்க முடியும்?

அதே முறையில்தான், நமது மாநிலத்தில் தமிழ் வழங்கும் பகுதியில், புகை வண்டி நிலையங்களிலும், அஞ்சல் நிலையங்களிலும் பெயர்ப் பலகைகளில் இந்திக்கு முதலிடமும், ஆங்கிலத்துக்கு இரண்டாம் இடமும், நமது தாய்மொழியாம் தமிழுக்கு மூன்றாம் இடமும் தரப்பட்டிருந்தன. இந்திக்கு ஏற்றம்தேடும் உரிமையை ஆங்கில மொழியும், அம்மொழிவழி வந்தோரும் தங்களுக்குத் தந்ததாலேயோ என்னவோ, நாட்டு மக்களின் மொழிக்கு மதிப்பளிப்பதைக் காட்டிலும், ஆங்கிலத்திற்குக் கூடுதலான மதிப்பளிக்கவேண்டுமென இந்தியப் பேரரசிலுள்ள வடவர் தீர்மானித்து, தங்கள் சொந்த மொழிக்கு அடுத்தபடி ஆங்கிலத்திற்கு இடம் தந்து, தமிழ் மொழியை தரைமட்டத்தில் தள்ளி வைத்து விட்டனர்!

முத்தமிழ் மணம் பேசி பிழைத்து வருவோரில் பெரும்பாலோருக்கு, தரை மட்டமாகப் பின்னணியில் தம் தாய்மொழி தள்ளப்பட்டிருப்பது கண்டும், சிந்தனை எழவில்லை—சினம் பொங்கவில்லை — தன்மானமும் தலை தூக்கவில்லை! அவர்களை மன்னிப்போம் — மறப்போம்!

பெரியார் பெரும் படை, இந்திக்குக் கிடைத்துள்ள ஏற்றத்தைக் குலைத்து, தமிழுக்கு அந்த இடத்தைப் பெற்றுத் தர முன்வந்தது. நமது கழகமும், அம்மொழி காக்கும் திருப்பணிக்குப் பின்னணியாக இருந்தது. கவர்னர் பிரகாசா, தாம் கவர்னர் என்பதையும் மறந்து, புகை வண்டி நிலையப் பெயர்ப் பலகையில் முதலிடம் பெற்றுள்ள இந்தி அழிப்புக்கு, 'இந்தி எழுத்தில் எழுதியுள்ள தமிழ்ப் பெயரை அழித்துக் கொள்ளலாமா?' என சொத்தை வாதம் பேசினார்! அவரையும் மீறும் வகையில், அவருடைய முன்னாள் அரசியல் சீடர்களில் சிலர், அழிந்த இந்தியை மண்ணெண்ணெய் விட்டுக் கழுவும் பெரும் பணியில் ஈடுபட்டனர். அமைதி காக்கும் பொறுப்பில் இருந்த ஆச்சாரியார், அந்த கழுவும் திணியாளரை உருவாக்கினார் — உற்சாகப்படுத்தினார்—அமைதி கெட வித்திட்டார்!

எதிர்ப்பு எக்காளமிட்ட போதிலும், எதற்கும் அஞ்சாது பெரியார் பெரும்படை, அதை ஒரு துரும்பென மதித்து, ஒரு முறையல்ல மும்முறை இந்தி அழிப்பை மேற்கொண்டது. முயற்சி திருவினையாக்கும் என்பதுபோல், இந்தி, இருந்த ஏற்றமான இடத்திலிருந்து இடம் பெயர்ந்துவிட்டது; அவ்வேற்றமான இடத்தை தமிழ் அலங்கரித்து விட்டது.

இப்பொழுது கிடைத்துள்ள வெற்றி தேய்பிறை அல்ல — வளர்பிறை! இன்று இந்திக்கு ஏற்பட்டுள்ள இட மாற்றம், வருங்கால திராவிடத்தை உருவகப்படுத்திக் காட்டுகிறது! இது, வரவிருக்கும் பெரியதோர் வெற்றியின் முன்னறிவிப்பு! வாழ்க தமிழ்! வீழ்க இந்தி ஆதிக்கம்!

## உ. பி. - யில் நிலக்கரி

### கிராமவாசிகளின் கண்டுபிடிப்பு

உத்திரப் பிரதேசத்தில், கார்த்வால் மாவட்டத்தில், லால்டு ஹங் பகுதியில் நிலக்கரி கிடைப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பள்ளத்தாக்கு ஒன்றில் நிலக்கரி கிடைப்பதைக் கண்ட கிராம மக்களின் முயற்சியினால் 13 மைல் சுற்றளவுள்ள பகுதிகளில் நிலக்கரி கிடைப்பதாக கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இதுபற்றி சர்க்கார் இன்னும் உறுதி செய்யவில்லை.

# பண்டித நேருவுக்குப் பிறகு யார்?

## அகில இந்தியத் தலைவரே இல்லையென்றால் அகிலஇந்தியாமட்டும்எப்படியிருக்கும்?

### பொதுச்செயலாளர் அண்ணாதுரை கேள்வி

"'நேருவுக்குப் பிறகு யார்?' என்று நான் பலமுறை சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கேட்டு வந்திருக்கிறேன்; அன்று காங்கிரசார் என் கேள்வியை துச்சமென மதித்தார்கள்; ஆனால், இன்று, பண்டித நேருவே அந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்—'நேருவுக்குப் பிறகு யார்?'—என்று! காங்கிரஸ் நண்பர்களைக் கேட்கிறேன், பதில் சொல்லுமாறு—பண்டித நேருவின் பாசத்திற்குக் கட்டுப்பட்டிருககிற நண்பர்கள், இனி எந்தத் தலைவரின் சொல்லுக்குக் கட்டுப்படப் போகிறார்கள்?"

"இந்தத் தலைமை பற்றி கம்யூனிஸ்டு நண்பர்களுக்குக் கவலையே இல்லை; ஏனெனில், அவர்கள் கட்சியே தலைவர்களைக் கொண்டு இயங்குவதல்ல."

"திராவிடர் இயக்கத்தை எடுத்துக் கொண்டால், பெரியார் ராமசாமி; அவருக்குப் பின் நான் நின்று கொண்டிருக்கிறேன்; எனக்குப் பின் தம்பிமார்கள் ஏராளமாக அணிவகுத்து நிற்கின்றனர்; ஆனால், அகில இந்தியாவிலும் செல்வாக்குப் பெற்ற தலைவர் நேருவுக்குப் பின் யார் இருக்கிறார்கள்? கிடையாதே!"

"அகில இந்தியத் தலைவரே இல்லை என்று சொன்னால், அகில இந்தியா மட்டும் எப்படி இருக்க முடியும்? எனவே நான், நாங்கள் சொல்லுகிறோம்—'பண்டித நேருவின் காலத்திலேயே, திராவிட நாடு பிரிவினை நடைபெற்றாக வேண்டும்' என்று! ஏனெனில், பண்டிதருக்குப் பின் வரும் எந்தக் காங்கிரஸ் தலைவரும், பண்டிதரைப் போன்ற, ஓரளவு நியாய உணர்வுடையவர்களாயிருப்பர் என்று எண்ணுவதற்கு இடமில்லை; பண்டிதர் காலத்திற்குள் நமது இலட்சியம் ஈடேற்றப்பட்டால்தான் அமைதியாக நாம் விடுதலை பெற முடியும்; இல்லாவிடில், பண்டிதருக்குப் பின், நாம், நமது இலட்சியத்தை ஈடேற்றுவதற்காகப் பயங்கரமான—மிகப் பெரிய போராட்டங்களை நடத்த வேண்டியவர்களாயிருப்போம்; எனவே, தென்னாட்டின் மீது பற்றுக் கொண்ட எல்லோரும் திராவிட நாட்டின் விடுதலை குறித்து, எண்ணிப் பார்த்து, ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டுகிறேன்,"

—இவ்வாறு, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், கடந்த 18—10—54 திங்களன்று, சென்னை, செம்பியம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை 20-வது வட்டம் செம்பியம் தி. மு. கழகச் சார்பில் 18—10—54ல் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஏ. கே. சாமி, எம். சி., தலைமை தாங்கினார். தோழர்கள்: முகவை ஆர். எஸ். பாண்டியன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசியதும், பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தி. மு. கழகத்தின் லட்சியத்தை விளக்கி அரியதோர் உரை நிகழ்த்தினார்.

பொதுச்செயலாளருக்கு வரவேற்பு இதழ் ஒன்று வாசித்தளிக்கப்பட்டதுடன், ஏராளமான மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிந்தது.

★

தொடர்ந்து பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"டெல்லி அரசாங்கமோ, சென்னை அரசாங்கமோ கடந்த ஏழாண்டு காலத்தில், ஏழைகளின் வாழ்வு மலர எதும் செய்யவில்லை என்று தி. மு. கழகத்தவர் சொல்கிறார்கள்; ஆனால், 'தி. மு. கழகத்தவர் என்ன செய்தார்கள்?' என்று கேட்பாரும் இருக்கிறார்கள்.

அவர்களுக்குச் சொல்லுகிறேன்—தி. மு. கழகம், இன்றைய நிலையில் ஒரு எதிர்க் கட்சி; அவ்வகையில் ஒரு எதிர்க்கட்சி என்ற முறையில், ஏழைகளை வாழ்விக்க திட்டங்கள் தான் தரமுடியும்; ஆனால், அத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பெரும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது.

எதிர்க்கட்சிகளிடம் திட்டங்கள் இருக்கின்றன; ஆனால், அத்திட்டங்களை நிறைவேற்ற அதிகாரம் கிடையாது.

அந்த அதிகாரத்தைத் தருமாறு இதுவரை, தி. மு. கழகம் மக்களிடம் கேட்கவில்லை; இனி அதிகாரத்தைத் தருமாறு மக்களைக் கேட்கத்தான் போகிறோம்; அவர்கள் அப்படி அதிகாரத்தை எங்களிடம் தருகிற நேரத்தில், நிச்சயமாக ஏழை எளியவர் வாழ்வு வளம் பெற, வளர, உயர வழி வகுப்போம்."

பொதுச் செயலாளர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இன்று தென்னாட்டை ஆளுகிற சென்னை, டெல்லி ஆகிய இரு அரசாங்கங்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும், டெல்லி அரசாங்கம் இந்த நாட்டிலிருந்து கொள்ளையிட்டுச்செல்கிற கொழுத்த வரிப்பணம் குறித்த புள்ளி விபரங்களையும் விளக்கி, சென்னை அரசாங்கம் அதிகாரம் இல்லாது தவிக்கும் நிலையையும் எடுத்துக்காட்டி, திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும் என்ற லட்சியம் எழுவதற்கான மூலகாரணங்களாக, மேற்கண்டவை எல்லாம் எப்படி விளங்குகின்றன என்பதையும் கூறி அரியதோர் உரை நிகழ்த்தினார்.

## உலக்ச்சிறப்புவாய்ந்த சென்னை முத்துக்கள்!

### மீண்டும் குளித்து எடுக்கப்படும்

சென்னை கிழக்குக் கடற்கரையில், கடந்த 2) ஆண்டு காலமாக நின்று போயிருந்த முத்துக் குளிக்கும் தொழில் அடுத்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து மீண்டும் நடைபெறும் என்று தெரிகிறது.

இம் முத்துக் குளிக்கும் தொழில் ஆரம்பிக்கப்படுமுன், முத்துச் சிப்பிகள் இன்னமும் அங்கே காணக் கிடைக்கின்றனவா என்று டிசம்பர், ஜனவரி ஆகிய திங்கட்களில் இரு தடவைகளாகப் பரீட்சைகள் நடத்திப் பார்க்கப்படும்.

தூத்துக்குடியை அடுத்துள்ள இடங்களில் முத்துச் சிப்பிகள் உள்ளன என்று மாநில மீன் பிடிக்கும் இலாகா அண்மையில் கண்டுபிடித்திருக்கிறது.

உலகிலேயே, சென்னை முத்துக்கள் தான் சிறப்பு வாய்ந்தவை என்று மீன் வள இலாகா உதவி டைரெக்டர் பீட்டர் தேவதாஸ் கூறியுள்ளாராம்!

# ஆட்சி மொழியாக தமிழ் ஆக்கப்படாததேன்?

## இந்தியைத் திணிக்க சூழ்ச்சியா?

தோழர் கஜபதி எம்.எல்.சி. கண்டனம்

"தமிழ் நாட்டில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக அமைக்க, ஆளும் சர்க்கார் முன்வராதது மிகவும் வருந்தத் தக்கது; தமிழ் மொழியில் உள்ள சிறப்பு வேறு எம்மொழியிலும் கிடையாது; நமது நாட்டு அறிஞர்கள் பலரும் இதனை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்; தமிழ் நாட்டிலுள்ள சட்டசபையிலும், மேல் சபையிலும், தமிழர்களாக அதிகம் பேர் இருக்கும்போது, உறுப்பினர் ஒருவர் எழுந்து 'நான் தமிழில் பேசலாமா?' என்று கேட்டு, அவைத் தலைவரின் வேண்டா வெறுப்போடு கூடிய ஒப்புதலின் பிறகு, அந்த உறுப்பினர் தமிழில் பேச வேண்டுமானால், இதைவிட இழி செயல் வேறு என்ன இருக்க முடியும்?

"மாநிலங்களில், அந்தந்தப் பகுதி மக்களின் தாய் மொழியில் சட்டசபை நடத்தலாம் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதி வைத்துவிட்ட பிறகு, சென்னை மாநிலத்தில், தாய் மொழியாகிய தமிழ் மொழியில் பேச அனுமதி கிடைக்கவில்லை என்றால், இதில் ஏதோ சூது இருக்கிறது என்பதுதானே பொருள்? இதைக் கண்டு தமிழர் தம் உள்ளங்கள் கோதிப்படைகின்றன. ஆட்சி மொழியாக இருப்பதற்கு மிக்க தகுதிவாய்ந்த தமிழ் மொழியைச் சூழ்ச்சியால் தடுத்து வருகின்றனர்: ஆகவே, தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், இதற்காக ஒன்றுபட்டுப் போராடும் காலம் வெகு விரைவில் வருகிறது,"

—என்று, மதுரை மாவட்டத் தமிழர் பேரவையின் ஆதரவில் திருவள்ளுவர் கழகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், தோழர் ஆ. கஜபதி (நாயகர்) எம்.எல்.சி. குறிப்பிட்டார்.

அவர், தமது உரையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:—

"தமிழ் மக்களின் பண்பாடு சாலச்சிறந்தது; பிறர் கூறுவதைச் சீர்தூக்கிப் பார்த்து, சரி என்று பட்டால், அதனைச் செயலில் காட்டவும் தயங்காதவர்கள் தமிழர்கள். மற்ற இனத்தவர் மீதோ, வேற்று மொழிகள் மீதோ வெறுப்பு கொள்ளாதவர்கள் தமிழர்கள்; இப்படிப்பட்ட தமிழர்கள் மீது இந்தி மொழியை வலுக் கட்டாயமாகத் திணிக்க முயற்சி நடக்கிறது; இந்தியோ, வெறும் பேச்சு மொழி தான்; அதில் வளர்ச்சி பெற்ற இலக்கண இலக்கியங்கள் கிடையாது; அப்படிப்பட்ட மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவருவதற்கு சட்டமியற்றியுள்ளார்கள். இந்தி மொழி ஆட்சி மொழியாக மாறினால் உடனே ஆங்கில மொழி மறைந்துவிடும்."

"இந்தியானது ஆட்சி மொழியாக மாறுமானால்—மாற்றப்பட்டால்—முதன் முதலாகப் பாதிக்கப்படப் போகிறவர்கள் வழக்கறிஞர்கள் தான்; ஆகவே, வழக்கறிஞர்கள்தான் முதன் முதலில் இந்தி மொழி ஆட்சி மொழியாவதைத் தடுக்க முன்வர வேண்டும். உயர்நீதிமன்றம் உட்பட எல்லா நீதிமன்றங்களிலும் தமிழ் மொழி இடம் பெற முயல வேண்டும்," என்றார்.

## பாகிஸ்தானத்தில் மாகாணப் பித்து!

அப்துர் ரப் நிஷ்டார் கண்டனம்!

பாகிஸ்தான் பஞ்சாபின் முன்னாள் கவர்னர் சர்தார் அப்துர் ரப் நிஷ்டார், காலஞ்சென்ற லியாகத் அலிகானின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள் கூட்டமொன்றில் பேசுகையில், பாகிஸ்தானில் மாகாணப் பித்து வளர்ந்துவருவதாகக் கண்டித்தார்.

"இந்த மாகாணப் பித்து நாட்டைப் பல துண்டுகளாகப் பிரித்து விட்டது. இந்த வருந்தத் தக்க நிலைக்குக் காரணமானவர்கள் ஆட்சி பீடத்திலிருப்போரே யாவர்" என்று அவர் கூறிவிட்டு மேலும், "இந்த நிலைக்குக் காரணமானவர்கள் வருங்காலத்தில், நாட்டை உருவாக்குகிற நேரத்தில் செல்வாக்கிழந்து போவார்கள் என்பது நிச்சயம்" என்றார்.

"பாகிஸ்தான் எந்த நோக்கத்துடன் அமைக்கப்பட்டதோ அதே நோக்குடன் நிச்சயம் நீடித்தே வாழும்; ஆட்சியிலிருப்பவர்களே பல பிரிவினராகப்பிரிந்து கிடக்கின்றனர்; அவர்களே, தங்கள் பதவிகளைக் காத்துக்கொள்வதற்காக, மாகாணப் பித்து பிடித்தலைகிறார்கள்; அவர்களுக்கெல்லாம் நாட்டின் நலனிலே நாட்டமிருப்பதாகவே தெரியவில்லை.

"இவை எல்லாம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதற்குக் காரணம், இவைகளைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் கொண்ட பொது மக்களின் கருத்து, நிறுவன ரீதியாக ஒன்று திரட்டப்பட்டு எடுத்துரைக்கப் படாததேயாகும்" என்றும் குறிப்பிட்டார்.

கராச்சியில் சர்க்கார் அலுவலகங்களும், வணிக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

கூட்டத்திற்கு கராச்சி முஸ்லிம் லீகின் தலைவர் தலைமை தாங்கினார். ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

## இந்தியாவின் அமெரிக்கத் தூதுவர்

ஆலன் திரும்பமாட்டார்;
பௌல்ஸ் மீண்டும் வரலாம்?

இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜார்ஜ் ஆலன் திரும்பி வரமாட்டார் என்றும், அவருக்குப் பதில் முன்னாள் தூதுவராயிருந்த பௌல்ஸ் என்பவர் நியமிக்கப்படலாம் என்றும் அமெரிக்கப் பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கும் — அமெரிக்காவுக்குமிடையே இருக்கும் சிறு சிறு மனத்தாங்கல்களை நீக்கி, இந்தியாவுடன் நல்லுறவு கொள்ள ஐசன்ஹோவர் விரும்புவதாகவும், இதன் காரணமாக அவர், அமெரிக்கத் திட்ட நிர்வாகியாயிருந்த ஹாப்மன் என்பவரை, இந்தியத் தூதுவராகச் செல்லும்படி கேட்டுக்கொண்டார் என்றும், ஆனால், ஹாப்மன், தனக்குப் பல வேலைகள் இருப்பதின் காரணமாக அப்பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்ததாகவும், எனவே, மறுபடியும் பௌல்ஸ் அப்பதவியில் நியமிக்கப்படலாம் என்றும் அந்தப் பத்திரிகை குறிப்பிடுகிறது.

## ஈரான் இராணுவ அதிகாரிகளுக்கு தூக்கு

தண்டனை ஊர்ஜிதம்!

ஈரான் இராணுவ அப்பீல் நீதிமன்றம் கம்யூனிஸ்டு தலைவர்கள் 10 பேர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்தும், இன்னும் இரண்டு பேருக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தும் தீர்ப்பு கூறியுள்ளது.

கடந்த மாதத்தில் 500 இராணுவ அதிகாரிகள் நாடுமுழுவதிலுமாக கம்யூனிஸ்டுகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

பல நாள் விசாரணைக்குப் பிறகு அவர்களில் 12 பேருக்கு மேற்கண்ட தண்டனை விதிக்கப்பட்டது.

அவர்கள் எல்லாரும் சோவியத் ரஷ்யாவிற்கு வேவு பார்த்ததாகவும் கூறப்படுகின்றது.

கடந்த வெள்ளியன்று, ஒரு இராணுவ நீதிமன்றம், வேவு பார்த்தமைக்காக துரோகக் குற்றம் சாட்டி 12 அதிகாரிகளுக்கு மரண தண்டனை விதித்தது.

அதற்கு ஒரு வாரத்திற்கு முன் இராணுவத்திலேயே ஒரு கம்யூனிஸ்டு யூனிட் வைத்திருந்ததற்காக, வேறு 10 பேர்களுக்கு மரண தண்டனை விதித்தும் ஒரு இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாம்.

★

## தூக்கிலிடப்பட்டோர் உறவினர் ஆர்ப்பாட்டம்

கூட்டத்தைக் கலைக்க போலீசார் தடியடி!

பாராளுமன்றத்தின் முன் நடைபெற்ற சம்பவம்

ஈரானில், சமீபத்தில் தூக்கிலிடப்பட்ட கம்யூனிஸ்டு அதிகாரிகளின் மனைவிகள், சகோதரர்கள் முதலிய உறவினர்களின் கூட்டம் சர்க்காருக்கு எதிரான கோஷங்களைக் கூறிக்கொண்டு, பாராளுமன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும், அவர்களைக் கலைக்கப் போலீசார் தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்றும் தெரிகிறது.

பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றதாம். தங்கள் கணவர்கள், சகோதரர்கள் உயிர் பலிக்காகப் பழி வாங்குவதாகக்கூறியும், தங்கள் குழந்தைகளுக்கு யார் கதி என்று கேட்டுக்கொண்டும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்களாம்! சபாநாயகரை அவர்கள் பேட்டி காண கோரினர்; ஆனால், சபாநாயகர் அதை மறுத்து விட்டார்.

## வானொலி மூலம் புகைப் படம்

இந்தியா — சீனாவுக்கிடையே தொடர்பு நிலையம்

இந்தியாவும்—சீனாவும் இப்போது வானொலி புகைப்பட அமைப்பினால் இணைக்கப்பட்டிருக்கின்றன.

பம்பாயிலுள்ள வெளிநாட்டு செய்தி நிலையம் இந்த வேலையைத் துவங்கியுள்ளது. ஏற்கனவே இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இருநாடுகளுடன் இவ்விதவானொலி புகைப்பட ஒலிபரப்பு நிலையங்கள் உள்ளன.

சீனாவில் தபால்—தந்தி இலாகா அமைச்சர் அனுப்பிய பாராட்டு ஒன்று ஹாங்காயிலிருந்து இந்திய சர்க்கார் அமைச்சர் ஜெகஜீவன் ராமுக்கு அனுப்பப்பட்டது.

சீன அமைச்சர் தனது செய்தியில் நீண்டகாலமாகத் தொடர்ந்து வரும் இந்திய—சீன நட்புறவு இந்தப் புதிய ஒலிபரப்பு அமைப்பு மூலம் மீண்டும் உறுதிப்படும் என்று கூறியுள்ளார்.

# டாட்டாக்களுக்கு டெல்லி அரசு தரும் பாதுகாப்பு!

## தொழிலை தேசிய மயமாக்க மாட்டார்களாம்!

டாட்டா என்ற வடநாட்டு முதலாளி நடத்துகிற—இந்திய சர்க்காருக்கு இரயில் எஞ்சின் போன்றவை உற்பத்தியாகிற டாட்டா எஞ்சினீயரிங் அண்டு லோகோமோடிவ் தொழிற்சாலையை சர்க்கார் ஏற்று நடத்தாது என்று மத்திய அரசாங்கம் அபயம் அளித்துள்ளது.

"அரசாங்கத் தேவைகளுக்கான சாமான்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகள் சர்க்காராலேயே நடத்தப்பட வேண்டும்," என்ற பொதுக் கணக்குக் குழுவின் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ள இயலவில்லையாம்.

பொதுக் கணக்குக் குழுவின் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளாததற்குக் காட்டும் பல காரணங்களுள், அந்தக் கம்பெனி நிர்வாகத்தில் சர்க்கார் மிகுதியான கட்டுப்பாடுகளை விதித்திருப்பதும் ஒன்றாம்.

## சீனாவிலிருந்து கச்சா பட்டு இறக்குமதி

இந்தியாவிலிருந்து புகையிலை ஏற்றுமதி

சீனா—இந்தியா ஒப்பந்தம்

இந்தியா—சீனா சர்க்கார்களிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி இனி, இந்தியாவிலிருந்து புகையிலை ஏற்றுமதி செய்யப்படும் என்றும், சீனாவிலிருந்து கச்சா பட்டு இறக்குமதி செய்யப்படும் என்றும் தெரிகிறது.

1953-ம் ஆண்டில் விளைந்த புகையிலை 47 லட்சம் பவுண்டுகளும் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்று தெரிகிறது.

## தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதி

மத்திய சர்க்கார் நிதி உதவி?

தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரும் 'சப்ஸிடி' கடன் உதவித் திட்டத்தின்படி, 1,189 வீடுகளைக் கட்டித் தர மத்திய அரசாங்கம் சென்ற செப்டம்பர் திங்களில் ரூ. 29,67,493 அனுமதித்திருக்கிறது.

இந்தத் தொகையில் ரூ. 23,30,850 மைசூர் தொழிலாளர் வீடு கட்டும் கார்ப்பொரேஷனுக்காக மைசூர் அரசாங்கத்திடம் தரப்படும். மைசூருக்குத் தரப்படும் அந்தத் தொகையிலும். 'சப்சிடி' தொகையாக ரூ. 11,63,700 என்றும், கடனாக ரூ. 11,67,150 என்றும் தெரிகிறது.

சென்னை, சுவர்ண—சாந்திரா 'எக்ஸ்டென்ஷன்,' மாண்டியா, ராஜாஜி நகர் போன்ற இடங்களில் ஒரு அறை மட்டும் கொண்ட 356 ஓரடுக்கு வீடுகள் கட்ட இந்தத் தொகை செலவழிக்கப்படுமாம்.

'சேலம் மாக்னஸைட் லிமிடெட்' நிறுவனத்தாருக்கும், இம்மாதிரியான 50 வீடுகள் கட்ட ரூ. 29,787 'சப்சிடி'யாகவும் ரூ. 44,681 கடனாகவும் தருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

மத்திய சர்க்காரின் இத்திட்டத்தின் கீழ், பம்பாய் மாநிலத்துக்கு ரூ. 1,55,925ம், கல்கத்தாவிற்கு ரூ. 4,06,250ம் அனுமதிக்கப்பட்டுள்ளதாம்.

## உலக அழகி!

லண்டனில் நடைபெற்ற 'சர்வதேச அழகிகள்' போட்டியில் எகிப்தின் எழிலரசியான காஸாண்டா என்பவர், 'உலக அழகி'யாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாராம்!

20 வயதுள்ள இவர் ஏற்கனவே 'மிஸ் எகிப்து' என்ற பட்டமும் பெற்றுள்ளவராம். முதற்பரிசாக அவருக்கு 500 பவுன்கள் பரிசளிக்கப்பட்டதாம்.

## நேருவுக்குப் பின் குழப்பம் ஏற்படும்!

விதர்ப்ப நாட்டு காங்கிரசின் தலைவர் அறிவிப்பு

விதர்ப்ப பிரதேச காங்கிரசின் தலைவரும், இந்தியப் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கோபால் ராவ் கேத்கர், பண்டித நேரு பதவியை விட்டுச் சென்ற பின்னர் நாட்டிலே குழப்பமும், கலவரமும் நிலவுமென்றும், அவர் விலகுதலால் ஏற்படும் நிலையை உடனடியாகச் சமாளிக்க நாம் இன்னும் தயாராகவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் நாட்டிற்கு விடுத்திருக்கும் சவாலை ஏற்றுக்கொள்வது அவசியம் என்றாலும், நாம் நிலைமைகளைச் சமாளிக்க சில முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று அவர் மேலும் கூறியுள்ளார். ஆகவே, நேரு பிரதம மந்திரியாக நீடிக்க வேண்டுமென்பதும் அவரது விருப்பமாகும்.

## ஜம்மு - டில்லி ரயில் மூலம் இணைக்கப்படும்

காஷ்மீர் முதலமைச்சர் அறிவிப்பு

ஜம்முவையும்— இந்தியாவையும் நேரடியாக ரயில் மூலம் இணைக்கும் வேலைக்கான உத்தரவுகளை இந்திய ரயில்வே அமைச்சர் பிறப்பித்து விட்டார் என்று தெரிகிறது.

பதன்கோட்டிலிருந்து லக்கிம்பூர் வரையில் 12 மைல்கள் ரயில் பாதை அமைக்கப்படுமென்றும், இதனால் ஜம்முவுக்கும், இந்தியாவுக்கும் இடையே ரயில் மூலம் நேரடி போக்குவரத்து ஏற்படும் என்றும் கூறப்பட்டது.

காஷ்மீரின் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் பற்றி இந்திய சர்க்காருடன் கலந்துபேசி சென்ற காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம் முகமது இச்செய்தியை பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

இப்போது காஷ்மீரில் பூரண அமைதியும் நம்பிக்கையும் நிலவுகிறது என்றும், அதன் எதிர் காலத்தைப் பற்றி இனிமேல் கவலைப்பட வேண்டியது இல்லை என்றும், பிரிவினைக்குப் பின்னர் இப்போது முதல் தடவையாக ஏராளமான வீடுகள் கட்டப்படுவதிலிருந்தே இதை அறிந்து கொள்ள முடியுமென்றும் அவர் மேலும் கூறினார்.

அடுத்து காஷ்மீரின் எதிர்காலம் பற்றி நம்பிக்கை தரும் அறிகுறியாக இந்த ஆண்டில் 35,000 உல்லாசப் பிரயாணிகள் வருவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது என்றும், இது 1945-ல் காணப்பட்ட நிலை என்றும் பக்ஷி குலாம் முகமது மேலும் கூறினார்.

## பாகிஸ்தான் முஸ்லீம் லீகில் பிளவு!

அரசியல் நகல் சட்டத்தின் விளைவு!

பாகிஸ்தான் அரசியல் சட்டத்தில், மேற்கு பஞ்சாபின் ஐந்து கோரிக்கைகளும் சேர்க்கப்படுவதற்காக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படாவிட்டால், முஸ்லீம் லீகில் பெரும் பிளவு ஏற்படக் கூடுமாம்.

இப்போதுள்ள அரசியல் சட்ட நகலில் பஞ்சாப் சேர்க்கப்படவில்லை என்று முஸ்லீம் லீக் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

# ஆயிரம் இன்ஷ்யூரன்ஸ் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

## சங்க நிர்வாகிகளை வேலையிலிருந்து நீக்கியதே காரணம்!

பம்பாய், அக். 19—

பம்பாயில் உள்ள பல்வேறு 'இன்ஷ்யூரன்ஸ்' கம்பெனிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட சிப்பந்திகள் இன்று, மெட்ரோ பாலிட்டன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி முன்கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இன்ஷ்யூரன்ஸ் சிப்பந்திகள் சங்கத்தைச் சார்ந்த பலரை, மெட்ரோபாலிடன் கம்பெனி நிர்வாகிகள், வேலையிலிருந்து நீக்கியதே இந்த ஆர்ப்பாட்டத்திற்குக் காரணமெனத் தெரிகிறது.

அகில இந்திய இன்ஷ்யூரன்ஸ் சிப்பந்திகள் சங்கம், அக்டோபர் 19-ம் நாளை, 'மெட்ரோ பாலிட்டன் தினம்' எனக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்துமாறு வெளியிட்ட அறிக்கையை ஒட்டியே பம்பாய் சிப்பந்திகள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தி இருக்கிறார்கள்.

கல்கத்தாவில் உள்ள மெட்ரோ பாலிட்டன் கம்பெனியார், இன்ஷ்யூரன்ஸ் சிப்பந்திகள் சங்கத்தின் பொதுச் செயலாளரை வேலையிலிருந்து நீக்கியதுடன், சங்கத்தின் நிர்வாகிகள் 55 பேர்களை தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைத்தும், வேறு நான்கு பேர்களை பல கிளை அலுவலகங்களுக்கு மாற்றல் செய்தும் உள்ளனர் என்றும், அதைக் கண்டித்தே ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என்று அகில இந்திய இன்ஷ்யூரன்ஸ் சிப்பந்திகள் சங்கம் கோருவதாகவும் தெரிவித்துள்ளது.

### நகரசபைக் கூட்டம் ஒத்திவைப்பு

சென்னை நகரின் முன்னாள் மேயராகப் பணியாற்றிய சி. தாதுலிங்க (முதலியார்) மறைவு குறித்து வருத்தம் தெரிவிக்கும் வகையில், 19–ந் தேதி மாலை சென்னை நகர சபையில் ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அவருக்கு மரியாதை செலுத்தும் முறையில், சபையும் அன்று ஒத்திவைக்கப்பட்டது.

# பட்டு மில் தொழிலாளர் வேலை நிறுத்தம்!

### 21 மில்கள் பாதிக்கப்பட்டன

பம்பாயிலுள்ள பட்டு மில்களில் 1,500 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். இந்தத் தொழிற்சாலைகளில் முதல் ஷிப்டில் மட்டும் 8,000 பேர் வேலை செய்கிறார்களாம்.

கம்யூனிஸ்டுகளால் ஆதரிக்கப்படும் 'ஹெஷ்மன் மஸ்தூர் யூனியன்' என்னும் தொழிலாளர் கழகத்தின் தலைவர் போலீசாரால் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டதை யொட்டி இந்த வேலை நிறுத்தம் நடைபெறுகிறது என்று தெரிகிறது.

பட்டுத் தொழிலில் விரும்பத்தகாத செயல்களைப் புரிந்தமைக்காக அவர் கைது செய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது.

பம்பாயில் உள்ள 109 பட்டு மில்களில் சுமார் 15,000 தொழிலாளர்கள் உள்ளனர் என்றும், இந்த வேலை நிறுத்தத்தால் 21 மில்கள் பாதிக்கப்பட்டன என்றும் தெரிகிறது.

8,000 தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதாக தொழிலாளர் தரப்பில் கூறப்படுகிறது.

# 25,000 விவசாயிகள் அறப்போர்!

### ஜமீன்தார்களின் போக்கை எதிர்த்து நடவடிக்கை!

சூரத், அக். 20—

ஜமீன்தார்கள் தங்களது நிலங்களில் புல் வளர்ப்பதை எதிர்த்து ஒத்துழையாமை இயக்கமொன்றை விவசாயிகள் துவக்கியுள்ளனர் என்று தெரிகிறது.

இவர்களெல்லோரும் பார்தி, பால்சார், தாரம்பூர் ஆகிய தாலுக்காக்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிகிறது.

நிலங்களில், வியாபார நோக்குடன் புல் பயிரிடுவதற்கு, ஜமீன்தார்கள், விவசாயிகளைக் கருவியாகக் கருதுவதை விவசாயிகள் எதிர்ப்பதாக பி. சோ. கட்சித் தலைவர் ஒருவர் கூறினர்.

உணவு உற்பத்திக்காக புல் வளர்க்கப்படும் பிரதேசங்கள் எல்லாம் அவசரமாகத் தேவை என்று விவசாயிகள் கருதுகின்றனர்.

ஏராளமான நிலங்களில் புல் வளர்ப்பதுமின்றி பரம்பரைப் பாணியில் சில 'பெரிய' ஜமீன்தாரர்கள் உருட்டவும், மிரட்டவும், விவசாயிகளை வெளியேற்றவும் செய்கின்றனராம்!

இத்தகைய ஜமீன்தார்களுக்கு வேலையே செய்வதில்லை என விவசாயிகள் புறக்கணிக்க முடிவு செய்துள்ளனர் என்றும் தெரிகிறது.

விவசாயிகள், 'வியாபாரத்துக்கான புல்' அறுத்துத் தருவதற்கு சம்பளமாக நாள்ஒன்றுக்குரூ.1-8-0 கோரியுள்ளனர்; ஆனால், வேறு விவசாய வேலைகள் செய்ய இதே விகிதத்தில் சம்பளம் கோரமாட்டார்கள் என்றும் தெரிகிறது.

### விடுதலை பெற்ற புதுவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் 1 முதல், பரிபூரணமான அதிகார மாற்றம் ஏற்படும் வரை, ஏற்கனவே இருந்து வருகிற ஆட்சி முறைகள் தொடர்ந்து இருந்து வருமெனவும், இந்தப் பகுதிகள், இந்திய யூனியனில் ஒரு 'சி' பிரிவு மாநிலம்போல் கருதப்படும் எனவும் தெரிய வருகிறது.

லாவோஸ் மந்திரி சபையில் உள்ள தற்காப்பு அமைச்சர் கொலை செய்யப்பட்டுள்ளதை யொட்டி பிரதமர் சுவர்ணபூமா இளவரசர் தமது மந்திரி சபையின் இராஜினாமாவை, சபையில் சமர்ப்பித்தார்.

# போலீசாரிடை அடிதடி!

### நால்வர் மருத்துவ மனையில்!

சென்னை, அக். 20—

சென்னை, போலீஸ் கமிஷனர் காரியாலய முற்றத்தில், மலபார் விசேட போலீஸ், விசேட ஆயுதப் போலீஸ் குழுவினருக்கிடையே ஏற்பட்ட சச்சரவில் கைகளாலும், தடி கொண்டும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்களாம்! இரண்டு மலபார் போலீசாரும், இரண்டு ஆயுதப் போலீசாரும் காயமுற்று சென்னை மருத்துவ மனையில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டுள்ளனராம்!

# புயல் சமீபிக்கிறது!

சென்னை, அக். 21—

வங்காளக் குடாக் கடலில் சென்னைக்குத் தென் கிழக்கே 700 மைல்களுக் கப்பால் உருவான புயல், இப்போது சென்னைக்கு 400 மைல் தொலைவில் தென் கிழக்கில் நெருங்கி வந்துள்ளது என்றும், அது மேலும் வலுப்பெற்று வடமேற்கு நோக்கி நகருமென்றும் நேற்றிரவு 12 மணிக்கு, சென்னை வானிலை ஆராய்ச்சிக் குழு அறிவித்திருக்கிறது.

இதனால், சென்னை துறைமுகத்திலும், கடலோரப் பிரதேசங்களிலும் புயல் எச்சரிகை கொடுக்கப் பட்டுள்ளது.

### வடநாட்டு அகதிகளுக்கு சென்னை தரும் சலுகை!

பாகிஸ்தானிலிருந்து அகதிகளாகச் சென்னை வந்து, உணவு தானிய நியாய விலைக் கடைகள் வைத்திருப்போர், சென்னை சர்க்காரால், வருகிற ஆண்டு மார்ச். திங்கள் முடிய, உணவு தானிய விற்பனைக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளார்கள்.

# ரேடியோ நாடகப் போட்டி

### பரிசு பெற்ற தமிழ் நாடகங்கள்

அகில இந்திய ரேடியோ ஏற்பாடு செய்திருந்த ரேடியோ நாடகப் போட்டியில், இரண்டு தமிழ் நாடகங்களுக்கு முறையே இரண்டாவது பரிசும், மூன்றாவது பரிசும் வழங்கப்பட்டிருக்கிறது.

எந்த நாடகமும் முதல் பரிசு பெறக்கூடிய அளவுக்கு உயர்தரமாக இருக்கவில்லை என்று நீதிபதிகள் கருதுவதால் முதல் பரிசு வழங்கப்படவில்லை.

திரு. வேதாசலம் எழுதிய "காட்டு மல்லிகை" என்ற நாடகத்துக்கு இரண்டாவது பரிசு 300/ ரூபாயும், திரு. ஜே. தியாகராஜன் எழுதிய "அன்பின் பரிசு" என்ற நாடகத்துக்கு மூன்றாவது பரிசு 200/ ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழில் மொத்தம் 402 நாடகங்கள் வந்திருந்தன. இந்தப் போட்டியில் வேறெந்த மொழியிலும் இத்தனை நாடகங்கள் அனுப்பப்படவில்லை.

13 மொழிகளில் நடத்தப்பட்ட இந்தப் போட்டிக்கு மொத்தம் 1,900 நாடகங்கள் வந்திருந்தன.

தமிழ் நாடகங்களில் பெரும் எண்ணிக்கை திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்திருந்தது: அதற்கு அடுத்தபடியாகச் சென்னையைச் சொல்லலாம்; கல்கத்தா, கட்டாக், விஜயவாடா, அலகாபாத், தார்வார், பூனா, ஹைதராபாத், மைசூர், திருவனந்தபுரம், கோழிக்கோடு ஆகிய இடங்களிலிருந்தும் சில நாடகங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

திரு. கி. வ. ஜகன்னாதனும், திரு. ஆர். பி. சேதுப் பிள்ளையும் இந்த நாடகங்களைப் பரிசீலனை செய்து பரிசளிக்கப்படுவதற்குரியவற்றைத் தெரிந்தெடுத்தனர்.

# பாகிஸ்தானில் அரசியல் நெருக்கடி?

## முகம்மது அலியின் சுற்றுப் பயணம் ரத்து

பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி தனது கனடா சுற்றுப் பயணத்தை திடீரென ரத்து செய்துவிட்டு பாகிஸ்தானுக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்.

முகமது அலி, வியாழனன்று ஒட்டாவா செல்ல இருந்தார்; அவர், தனது சுற்றுப் பிரயாணம் ரத்து செய்யப்பட்டதைப் பற்றி வருத்தப்பட்டு, கனடா பிரதமர் லூயிஸ் லாரண்டிற்கு செய்தி ஒன்று அனுப்பி, தான், தனது நாட்டிற்கு உடனே செல்ல வேண்டியிருப்பதால் கனடா சுற்றுப் பிரயாணத்தை ரத்து செய்வதாகக் கூறியுள்ளார்.

வாஷிங்டனிலுள்ள பாகிஸ்தான் தூதுவர், முகமது அலி தனது அமெரிக்க, கனடா சுற்றுப் பயணங்களை குறைத்துக் கொண்டதாகக் கூறினர்.

"முகமது அலி உடன் திரும்பி அழைக்கப்பட்டாரா?" என்று கேட்டபோது, "அது சரியில்லை என்றும், முகமது அலி சிறிது காலமாகவே நாட்டிற்கு வெளியேயிருந்திருக்கிறார்; ஆகவே, அவர் இப்போது நாடு திரும்புகிறார்," என்றும் கூறினர்.

★

இதற்கிடையில், அக்டோபர் 27-ல் கூடவிருந்த பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை, அக்டோபர் 23-ல், பாராளுமன்றமாகக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் நிர்ணய சபையின் நிகழ்ச்சிகளில் செய்யப்பட்டுள்ள மாற்றம், மிகவும் கூர்ந்து கவனிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் அரசியல் சட்டத்தை எதிர்த்து பஞ்சாப் பிரதமர் நூன் செய்யும் போராட்ட முயற்சிகளை அடக்கவே இந்த ஏற்பாடுகள் என்று கருதப்படுகிறது.

வடமேற்கு எல்லைப்புற மாகாண முதல் அமைச்சர் அப்துல் நிஷ்டார் லாகூர் வந்திருக்கிறார். இவர் மேற்குப் பஞ்சாப் முதல் அமைச்சர் நூனுடன் இரு மாகாணங்களும் சேர்ந்த உப-பெடரேஷன் அமைப்பு ஒன்றைப் பற்றி விவாதிப்பார் என்று தெரிகிறது.

பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாகிஸ்தான் வர்த்தக சபைத் தலைவர் கூறியுள்ளதுடன், அவசர பொருதாரக் குழு ஒன்று நியமிக்க வேண்டுமென்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

# தஞ்சாவூர் மாவட்ட கழகத்தேர்தல்

### 44 சத விகித வாக்காளர்களே கலந்து கொண்டனர்!

தஞ்சாவூர் மாவட்டக் கழகத் தேர்தலில் 48 தொகுதிகளில் உள்ள மொத்தம் 14,76,779 வாக்காளர்களில், 6,48,280 வாக்காளர்களே தமது வாக்குகளைப் பதிவு செய்தனர்.

நான்கு தொகுதிகளில், காங்கிரசார் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பதிவான மொத்த வாக்குகளில் 39,539 வாக்குகள் செல்லாதவையாகிவிட்டன; எனவே, மொத்தம் 44 சதவிகிதத்தினர் தான் தேர்தலில் பங்கு பெற்றிருக்கின்றனர்.

மொத்தமுள்ள 52 தொகுதிகளில், காங்கிரசார், 50 தொகுதிகளில் போட்டியிட்டு, 4 தொகுதிகளில் போட்டியின்றியும், 42 தொகுதிகளில் வெற்றி பெற்றும் மொத்தமாக 46 இடங்களைப் பிடித்துள்ளனர்.

சுயேச்சையாளர்கள் 33 தொகுதிகளில் போட்டியிட்டு 4 இடங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளனர்.

கம்யூனிஸ்டுகள் 24 இடங்களில் போட்டியிட்டு 2 இடங்களை மட்டுமே பெற முடிந்தது.

சோஷலிஸ்டுகள் 3 இடங்களில் போட்டியிட்டு மூன்றிலும் தோல்வி கண்டனர்.

மாவட்டக் கழகத் தேர்தலில் மொத்தமாக காங்கிரசுக்கு 3,36,012 வாக்குகளும், சுயேச்சையாளர்களுக்கு 1,23,099 வாக்குகளும், கம்யூனிஸ்டுகளுக்கு 1,43,930 வாக்குகளும், சோஷலிஸ்டுகளுக்கு 5,600 வாக்குகளும் கிடைத்தன.

# சூயஸ் கால்வாய் பகுதியிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் உடனடியாக வெளியேற்றம்

### ஆங்கிலோ—எகிப்திய ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று

சூயஸ் கால்வாய் பற்றி பிரிட்டன், எகிப்து ஆகிய நாடுகள் மேற்கொண்டிருக்கிற ஒப்பந்தப்படி 1956 ஜூன் 20-ந் தேதிக்குள் அங்குள்ள 80,000 பிரிட்டிஷ் துருப்புகளும் வெளியேறிவிடும் என்று தெரிகிறது.

துருக்கி அல்லது வேறெந்த அராபிய நாடுகளின் மீதும் வெளி நாட்டுப் படையெடுப்பு நிகழுமானால் அந்த நேரத்தில் பிரிட்டிஷ் துருப்புக்கள் மீண்டும் சூயஸ்கால்வாய்ப் பகுதிகளைத் தளமாக அமைத்துக்கொள்ளும் எனவும், கையெழுத்தான ஒப்பந்தம் கூறுகிறது.

கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக சூயஸ் பகுதியில் ஆதிக்கம் வைத்திருந்த பிரிட்டிஷ் துருப்புக்கள் இன்னும் 20 மாத காலத்தில் வெளியேறிவிடும்

கடந்த ஜூலையில் நிறைவேறிய ஆரம்பகால உடன்படிக்கையின் படி பிரிட்டிஷ் துருப்புக்கள் சூயஸ் பகுதியைவிட்டுச் சென்றதும் அப்பிரதேசத்தை எகிப்திய அரசாங்கமும் பிரிட்டிஷ் சிவில் காண்ட்ராக்டர்களும் கூட்டாகச் சேர்ந்து பாதுகாத்து வருவது என்று முடிவு செய்யப்பட்டதும் நினைவிருக்கலாம்.

துருக்கி அல்லது மற்றைய அராபிய நாடுகளுக்கு ஆபத்து என்று சொன்னால், பிரிட்டனும் எகிப்தும் கலந்தாலோசிக்கும் என்றும் ஒப்பந்தம் கூறுகிறது.

பிரிட்டிஷ் விமானங்கள் குறிப்பிட்ட சில எகிப்திய விமான நிலையங்களில் இறங்கிப் பறந்து செல்லவும் எகிப்து அனுமதியளித்துள்ளது.

புதிய ஒப்பந்தத்தில் 13 பிரிவுகள் உள்ளன.

இங்கிலாந்திற்காக அந்தோனி நட்டிங் என்ற ராஜ்ய இலாக்கா மந்திரியும், எகிப்திற்காக பிரதமர் கப்டெல் தாசரும் கலந்து கொண்டனர்.

# எகிப்தில் சணல் தொழிற்சாலை

### பாகிஸ்தான் ஆரம்பிக்கும்

எகிப்துநாட்டில் ஒருசணல் தொழிற்சாலை ஆரம்பிப்பது குறித்து இம்மாத இறுதிக்குள் முடிவு செய்யப்படும் என்று எகிப்து பாங்கி ஒன்று அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இத்தகைய சணல் தொழிற்சாலைக்கு பாகிஸ்தானிலுள்ள ஒரு நிறுவனம் 4,50,000 பவுன் முதலீடு செய்து துவக்குவதாகக் கூறியுள்ளதாம். எகிப்தியை பாங்கி 1,50,000 பவுன் பாகிஸ்தான் நிறுவனத்திற்கு உதவும் எனவும் தெரியவருகிறது.

### திருத்தம்

★

சென்னை 15—10—54 (வெளியூர் 16—10—54) 'நம் நாடு' இதழில், தோழர் இரா. நெடுஞ்செழியன் இலங்கைப்பயணத்தின்போது அவரை வழியனுப்புதலில் "ஆலங்குடி கலைவளர்ச்சிக் கழகத்தினரும்" கலந்துகொண்டனர் என்றிருப்பதற்குப் பதிலாக, "ஆலங்குடி தி. மு. கழகத்தினரும்" என்று திருத்தி வாசித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். (ஆ-ர்.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.